17th March 1955]

SRI M. KALYANASUNDARAM :—" அந்தத் தொழிற்சங்கம் முதலாளிகள் சொல்கிறபடி நாலேமுக்கால் மாத போனஸுக்கு ஒப்புக் கொள்ளுகிறோம் என்று லேபர் கமிஷனருக்குக் கடிதம் எழுதியிருப்பது உண்மையா இல்லையா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அட்ஜுடிகேஷனுக்கு இந்த விஷயம் ரெபர் பண்ணப்பட்ட பிறகுதான் அந்தக் கடிதம் லேபர் கமிஷனருக்கு வந்தது."

Tirumalai-Tirupathi Devasthanam Estate at Tiruvallur.

* 1430 *Q*.—SRI M. DHARMALINGAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount allotted for improving the irrigation sources in Tirumalai-Tirupathi Devasthanam Estate at Tiruvallur now taken over by the Government for the year 1953–54;

(*b*) whether any amount was surrendered unspent; and

(*c*) if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU :—" (*a*) The allotment sanctioned for 1953–54 was Rs. 1,01,073.

" (*b*) A sum of Rs. 1,401 was surrendered as being unspent.

" (*c*) After the Andhra became a separate State, the estate was taken over by the Collector of Chingleput on 1st October 1953 and then the rainy season had commenced. So, this small amount was left unspent."

SRI S. RAMALINGAM :—" திருவள்ளூரில் இருக்கக்கூடிய திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள் எஸ்டேட் அபாலிஷன் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறதா ? உட்படுத்தப்படாதிருந்தால் அதை அந்தச் சட்டத்திற்குட்படுத்த தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுப்பார்களா ? "

THE HON. SRI M. A. MANICKAVELU :—" This is an estate that has been taken over by the Government."

MR. SPEAKER :—" We shall now take up question No. 1420. The answer is now ready."

Working of the Prohibition Act.

* 1420 *Q*.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state with reference to question No. 104 answered on 7th December 1954, the contents of the report submitted to the Planning Commission with regard to the working of the Prohibition Act in this State?

THE HON. SRI B. PARAMESWARAN :—" A copy [a] of the report is placed on the table of the House."

SRI N. K. PALANISAMY :—" ஆந்திராவில் ராமமூர்த்தி கமிட்டியை ஏற்படுத்தி மதுவிலக்கு சட்டம் சம்பந்தமாகப் பரிசீலனை செய்து, பின்னர் அக்கமிட்டியின் ரிப்போர்ட்டு பேரில் மதுவிலக்குச் சட்டத்தை தளர்த்திருப்பது

[a] Printed as Appendix III on page 986 infra.

நம் எல்லோருக்கும் தெரியும். சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய புள்ளி விவரங்களில் மதுவிலக்குக் குற்றம் செய்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதால் மதுவிலக்குச் சட்டம் நம் ராஜ்யத்தில் வெற்றிகரமாக அமுல் நடத்தபடவில்லையென்பது தெரிகிறது. ஆகவே இந்த ராஜ்யத்திலும் ராமமூர்த்தி கமிட்டியைப்போல ஒரு கமிட்டியைப் போட்டு அந்தச் சட்டத்தைத் தளர்த்த முயலுவார்களா ? அல்லது அந்தச் சட்டத்தையே அபாலிஷ் பண்ணுவதற்கு சர்க்கார் முன் வருவார்களா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—"ஆந்திராவில் நியமிக்கப்பட்ட ராமமூர்த்தி கமிட்டியைப்போல இங்கும் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி இதனைப் பரிசீலிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லை. சர்க்கார் அகர்வாலா கமிட்டியின் ரிப்போர்ட்டைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்."

MR. SPEAKER :—"Questions are over. On the point raised by the hon. the Deputy Leader of the Opposition, Sri Kalyanasundaram, ruling will be given to-morrow."

SRI S. PANCHAKSHARAM :—"Before that, some of us also want to express our views so that there need not be any necessity for arriving at a final decision."

MR. SPEAKER :—"No discussion on that point is necessary now.

"The hon. Member Sri Gopalan has given notice of a motion under rule 40 of the Assembly Rules. He will now explain the point involved in the motion."

SRI P. G. KARUTHIRUMAN :—"நான் rule 40-ன் கீழ் ஒரு பிரேரணையை நோட்டீஸ் கொடுத்திருந்தேன். அதற்கு கனம் மந்திரி அவர்களும் பதிலுடன் தயாராயிருக்கிறார்கள் என்றும் சொன்னேன். அதை இன்றைக்கு எடுத்துக்கொள்வதாகத் தாங்களும் சொன்னீர்கள். அது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்."

MR. SPEAKER :—"The hon. Member represented to me that the Hon. Minister was ready with information in regard to the point he proposed to raise. But the Hon. Sri Bhaktavatsalam will not be here to-morrow. So, he wanted the motion of the hon. Member Sri K. P. Gopalan to be taken up to-day."

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—MOTION UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* ATTACK ON PROCESSION OF HOTEL WORKERS IN THE CITY OF MADRAS.

* SRI K. P. GOPALAN :—"Sir, the motion I have given notice of is to call the attention of the Minister for Labour to a matter of urgent public importance, viz., the failure of the police to give protection to the peaceful procession of hotel workers in the City of Madras from the attack of goondas organized and led by the proprietor of Murali Cafe, Triplicane, Madras, on 24th February 1955.

"The main issue involved in this case is this. The workers have got a right to take out peaceful processions. It is the duty of the police to protect the workers while they take such peaceful